

நாமக்கல் கிழக்கு மாவட்டம் நாமகிரிப்பேட்டை பேரூர் தி.மு.க. கழகத்தின் சார்பில் தலைவர் கலைஞர் நூற்றாண்டு விழாவை ஒட்டி புதிய கழக கொடியேற்று விழா, மாநிலம் முழுவதும் மகளிர் உரிமைத் தொகை வழங்கிய முதல்வருக்கு நன்றி தெரிவிக்கும் விழா மற்றும் கழக அரசின் இரண்டு ஆண்டு சாதனை விளக்க மாபெரும் முப்பெரும் விழா என பொதுக்கூட்டத்தில் நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், தி.மு.க. மாநிலங்களவை உறுப்பினருமான கே.ஆர்.என்.இராஜேஷ்குமார் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். இக்கூட்டத்தில் ஒன்றியக் கழகச் செயலாளர் கே.பி.இராம சுவாமி, நாமகிரிப்பேட்டை பேரூர் கழக செயலாளர் கே.அன்பழகன் மற்றும் ஒன்றிய, நகர, பேரூர்க் கழக செயலாளர், சார்பணி நிர்வாகிகள், கழக நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## கேரளாவில் குண்டுவெடிப்பு!

சென்னை, நவ. 1 -

கேரளாவில் நடைபெற்ற குண்டு வெடிப்பு குறித்து மனித நேய மக்கள் கட்சித் தலைவர் பேராசிரியர் எம். எச். ஜவாஹிருல்லா விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

கேரள மாநிலம் எர்ணாகுளம் அருகே உள்ள களமசேரியில் ஞாயிறு தோறும் நடக்கும் கிறிஸ்தவ மத சிறப்பு ஜெபக்கூட்டம் நடக்கும் இடத்தில் இன்று காலை 9 மணியளவில் மூன்று இடங்களில் பயங்கர வெடி விபத்துகள் நடைபெற்றுள்ளது. இதில் பெண் ஒருவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். 30க்கும் மேற்பட்டோர் படுகாயங்களுடன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இதில் 7 பேரின் நிலை கவலைக்கிடமாக இருப்பதாக தகவல்கள் தெரிகின்றன என்றார்.



கோவை வடக்கு மாவட்ட மாணவர் அணி சார்பில் முத்தமிழறிஞர் கலைஞரின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு வீரபாண்டி பேரூராட்சி, நாயக்கனூர் பாலாஜி திருமண மண்டபத்தில் பள்ளி, கல்லூரி மாணவ, மாணவியருக்கான பேச்சுப்போட்டி மற்றும் கட்டுரைப் போட்டி கோவை வடக்கு மாவட்டச் செயலாளர் தொண்டாமுத்தூர் ரவி தலைமையில், மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் அந்தோணிராஜ் வரவேற்புரையில், கூடலூர் நகர்மன்றத் தலைவர் அறிவரசு, வீரபாண்டி பேரூர் கழக செயலாளர் சுரேஷ்குமார், பேரூராட்சி தலைவர் பத்மாவதி, மாவட்ட மாணவர் அணி துணைஅமைப்பாளர்கள் சிவக்குமார், ரபீக், மனோஜ்குமார், தினேஷ் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் அமைச்சர் சு.முத்துசாமி போட்டியை துவக்கி வைத்து வெற்றிபெற்ற மாணவ, மாணவிகளுக்கு பரிசுகளை வழங்கினார். இதில் சரவணகுமாரி, அசரப் அலி, ஹக்கீம், தியாகு, மெஹரிபா பர்வீன் அசரப் அலி, உஷா, கார்த்தி,சுரேஷ்குமார், தனபால், அன்னூர் நந்தகுமார்,காரமடை வெங்கடேஷ், நாகநந்தினி, ஜோதி பிரகாஷ், அருண், விக்னேஷ் வீரபாண்டி கார்த்தி உள்பட பலர் கலந்து கொண்டனர்.

### கிருஷ்ணகிரி மேற்கு மாவட்ட

# வாக்காளர் பட்டியல் சரிபார்க்கும் பணி!

## மாவட்டக் கழகச் செயலாளர் ஒய். பிரகாஷ் எம்.எல்.ஏ. அறிக்கை!

கிருஷ்ணகிரி, நவ. 1 -

தமிழ்நாடு முதலமைச்சரும், திராவிட முன்னேற்ற கழக தலைவருமான தளபதியார் அவர்களின் அறிவுரைப்படி இந்திய தேர்தல் ஆணையம் வரும் 01.01. 2024 ஆம் தேதி தகுதி நாளாக கொண்டு புகைப்படத்துடன் கூடிய வாக்காளர் பட்டியல் சிறப்பு சுருக்க முறை திருத்தத்தினை இந்திய தேர்தல் ஆணையம் கீழ்க்காணும் அட்டவணைப்படி அறிவித்துள்ளது.

கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டத்துக்கு உட்பட்ட ஓசூர், தளி, வேப்பனப்பள்ளி சட்டமன்ற தொகுதிகளில் 27.10.2023 முதல் 09.12.2023 வரை புதிய வாக்காளர்களை சேர்க்கவும், பெயர்கள் நீக்கவும், திருத்தம் செய்யவும் மனு செய்ய கால அவகாசம் கொடுக்கப்பட்டுள்ளது.

இது தவிர நவம்பர் மாதம் 4, 5, 18, 19 ஆகிய நான்கு நாட்களில் நிர்ணயிக்கப்பட்ட வாக்குச்சா



வடி மையங்களில் காலை 09.30 மணி முதல் மாலை 05.30 மணி வரை அந்தந்த வாக்குச்சாவடி மையங்களில் சிறப்பு முகாம்கள் நடத்தப்பட உள்ளன.

அதன்படி இந்த நாட்களில் வாக்காளரே தாமாக முன்வந்து வாக்காளர் பட்டியலில் உள்ள தங்களது பெயர் விவரங்களை சரி பார்த்து விடுபட்டவர்களும் இடம் மாறிய வாக்காளர்களும் 01.01.2024 அன்று 18 வயது நிரம்ப க்கூடிய புதிய வாக்காளர்களும் தங்கள் பெயர்களை சேர்க்க, நீக்க, திருத்தங்கள் மேற்கொள்வதற்கான படிவங்களை பெற்று பூர்த்தி செய்து அந்த படிவங்களை வாக்குச்சாவடி மையங்களில் கொடுக்க வேண்டும்.

மேலும் வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடுதல் 27.10.2023

பெயர்களை சேர்த்த, நீக்க, திருத்தம் செய்வதற்கு மனு கொடுக்க கால அவகாசம் 27.10.2023 முதல் 09. 12.2023 வரை சிறப்பு முகாம்கள் நடத்தப்படும் நாட்கள் நவம்பர் 4, 5, 18, 19 ஆகிய தேதிகளில் சிறப்பு முகாம்கள் நடைபெறும்.

இறுதி வாக்காளர் பட்டியல் வெளியிடப்படுவது 01.01.2024 மேற்கண்ட நாட்களில் நடைபெறும் வாக்காளர்கள் சேர்ப்பு பணியிலும், சிறப்பு முகாம்கள் நடைபெறும் நாட்களிலும் கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டத்தைச் சேர்ந்த மாநில, மாவட்ட, நகர, ஒன்றிய, பேரூர் கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், சட்டமன்ற முன்னாள் உறுப்பினர்கள், மாவட்ட, மாநகர , ஒன்றிய, பேரூராட்சி தலைவர், துணைத் தலைவர் மற்றும் கவுன்சிலர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் வாக்குச்சாவடி நிலை குழு முகவர்கள், மற்றும் பூத் கமிட்டி உறுப்பினர்கள் மற்றும் கழக அனைத்து அணிகளின் தலைவர், துணைத் தலைவர், மாவட்ட அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள், கழகத் தோழர்கள் அனைவரும் இந்த வாய்ப்பினை பயன்படுத்தி தங்களை முழுமையாக ஈடுபடுத்திக் கொண்டு இந்த பணியின் விவரங்களை மாவட்டக் கழகத்திற்கு தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பு :

வாக்காளர் சேர்க்கும் பணியின் போது நமது கழகத்தினர் சார்பாக நியமிக்கப்பட்டுள்ள பாக முகவர்கள் இந்த பணியினை முழுமையாக இருந்து நாடாளுமன்றத் தேர்தல் வரை தேர்தல் ஆணையத்தால் நியமிக்கப்பட்டுள்ள BLO உடன் இருந்து கண்காணிக்க வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன்.

### ஏழை, பெண் தொழிலாளர்களை சுரண்டிக் கொழிக்கும்

# ஹைடிசைன் நிர்வாகத்தை கண்டித்து முற்றுகைப் போராட்டம்!

## புதுச்சேரி எதிர்க்கட்சித் தலைவர் இரா.சிவா பங்கேற்பு!

புதுச்சேரி, நவ. 1 -

புதுச்சேரி மாநிலம் ஒதியம்பட்டு கிராமத்தில் இயங்கி வரும் ஹைடிசைன் என்ற நிறுவனம் கடந்த 40 ஆண்டுகளுக்கு முன்பு துவக்கப்பட்டு ஏழை, பிற்படுத்தப்பட்ட மற்றும் தலித் இனப் பெண்களை தொழிலாளர்களாக கொண்டு தோல் பொருட்களை உற்பத்தி செய்து உலக அளவில் சந்தையை உருவாக்கி மிகப் பெரிய அளவில் வியாபாரம் நடத்தி வருகின்றது.

மிக அதிக விலைக்கு விற்கப்படும் இந்நிறுவன தோல் பொருட்களை உற்பத்தி செய்கின்ற தொழிலாளர்களுக்கு அவர்களின் அறியாமையையும், ஏழ்மையையும் பயன்படுத்தி சொற்பமான ஊதியம் வழங்கி மிக மோசமாக அவர்கள் சுரண்டப்படுவது தொடர்ந்து நடந்து வருகிறது. இந்த சுரண்டலுக்கு ஒன்றிய, மாநில அரசு அதிகாரிகளும், சில அரசியல் புள்ளிகளும் துணையாக இருந்து வருகின்றனர். தொழிலாளர்களை ஒடுக்கி தாம் அடித்த கொள்ளை லாபத்தை வைத்து நாட்டின் பல்வேறு இடங்களில் இதன் கிளைகளும் புதுச்சேரியின் ஒயிட்டவுன் பகுதியில் பிரம்மாண்டமான ஸ்டார் ஹோட்டலும் உருவாகிவுள்ளன.

35 ஆண்டுகளுக்கு மேலாக பணிபுரியும் ஸ்கில் தொழிலாளர்களுக்கு சொற்ப சம்பளம் வழங்கப்படுவது என்பது கொடுமையானது. அத்துடன் 55 வயதிலேயே சட்டத்திற்கு புறம்பாக அவர்களின் உழைப்பை சுரண்டிக் கொண்டு அவர்கள் எவ்வித நிதியுதவியுமின்றி வீட்டுக்கு அனுப்பப்படுகின்றனர். இத்தனை தொழிலாளர் உரிமைச் சட்டங்கள் இருந்தும் கொத்தடிமைப் போல் இத்தொழிலாளர்கள் நடத்தப்படுகிறார்கள். அரசு நிர்ணயிக்கும் குறைந்தபட்ச கூலி சட்டத்தையும் இவர்கள் மதிப்பதில்லை. இந்த நிலையில் தான் தீபாவளி பண்டிகையை முன்னிட்டு வழங்க வேண்டிய போனஸ் தொகையை முடிவு செய்வதிலும் அலட்சியம் காட்டி தான்தோன்றித்தனமாக நிர்வாகம் நடந்து கொண்டுள்ளது.

சென்ற ஆகஸ்ட் 11-ஆம் தேதி போனஸ் பேச்சு வார்த்தைக்கு கடிதம் கொடுத்து சட்டப்பேரவை எதிர்க்கட்சித் தலைவர் இரா. சிவா முன்னிலையில் சங்க பிரதிநிதிகள் நிர்வாகத்துடன் பேச்சுவார்த்தை நடத்தினார்கள்.

அப்போது கொரோனாவிற்கு முன் ஆண்டு தரப்பட்ட 19.25 சதவீத போனஸ் தொகையை, கொரோனாவை காரணம் காட்டி கடந்த இரண்டு ஆண்டுகளாக 8.33 சதவீதம் தொகையாக குறைத்துக் கொடுத்து தொழிலாளர்களை ஏமாற்றி உள்ளதையும், இதுசம்பந்தமான வழக்கு நீதிம ன்றத்தில் உள்ளதையும் சுட்டி க் காட்டி, கடந்த இரண்டு ஆண்டுகள் கொடுத்த போனஸ் தொகை தொடரக்கூடாது என்றும் இவ்வாண்டுக்கு 22.50 சதவீதம் போனஸ் வழங்க வேண்டும் என்றும் கோரிக்கை வைக்கப்பட்டது. பின்னர் செப்டம்பர் 8-ஆம் தேதி நடந்த இரண்டாம் கட்ட பேச்சுவார்த்தையில் முடிவு எட்டப்படாததால் ஒரு வாரத்தில் (30.10.2023) அன்று மீண்டும் பேச்சு வார்த்தைக்கு அழைத்து தீர்வு காணப்படும் என்று நிர்வாகம் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இந்நிலையில் எவ்வித முன் அறிவிப்புமின்றி, மூன்றாம் கட்ட பேச்சு வார்த்தைக்கு அழைக்காமல் நிர்வாகம் சார்பில் அவர்களாகவே முடிவு செய்து 8.33 சதவீதம் மட்டுமே போனஸ் தொகை தரப்படும் என்றும் அத்தொகை தொழிலாளர்களின் வங்கி கணக்கிற்கு அனுப்ப இருப்பதாகவும் குறிப்பிட்டு கடிதம் அனுப்பி இருப்பது நிர்வாகத்தின் தன்னிச்சையான முடிவாகும். இதனை தொழிற்சங்கம் வன்மையாக கண்டிக்கிறது.

சென்ற ஆண்டு தொழிலாளர் துறையின் சமரச மையம் மூலம் நடந்த பேச்சு வார்த்தையின்பொழுது இப்படித்தான் தானாக 8.33 சதவீதம் முடிவு செய்து தொழிற்சங்க அனுமதியின்றி தொழிலாளர்களின் வங்கி கணக்கிற்கு அனுப்பியது போல் இந்த முறையும் அனுப்பக்கூடாது என்று இரண்டாம் கட்ட பேச்சு வார்த்தையில் தொழிற்சங்கம் சார்பில் முன்வைத்தும் நிர்வாகம் தானாகவே இந்த முடிவை எடுத்துள்ளது என்பது தொழிற்சங்கத்தையும், தொழிலாளர்களையும் அலட்சியப் படுத்துவதாகும். இதுசம்பந்தமாக முத்தரப்பு கமிட்டி தான் முடிவு செய்ய வேண்டும். நான் நினைச்சது தான் இந்த அரசாங்கம் என்ற நிலையில் அத்தொழிற்சாலையின் மனிதவள மேம்பாட்டு அதிகாரி (HR) நாம் கொடுக்கும் போனஸ் தொகையை இந்த தொழிலாளர் நாய்கள் வாங்கிக்கொண்டு சென்றுவிடுவார்கள் என்று மிகவும் இழிவாக பேசியுள்ளார். தொழிலாளர்களின் தன்மானத்தையும், சுயகவுரவத்தையும் கெடுக்கும் நோக்கில் பேசியிருப்பது கண்டனத்திற்குரியது.

ஆகவே, நிர்வாகத்தின் ஒருதலைப்பட்சமான, எதேச்சையான முடிவை கண்டித்தும், பணிபாதுகாப்பு இல்லாமல் தொழிலாளர்களை அடிமைகளைப் போல் அலட்சியப்படுத்தி இழிவாக பேசிய தொழிற்சாலை அதிகாரி மீது வழக்கு பதிவு செய்து நடவடிக்கை எடுக்க வலியுறுத்தியும், தொழிற்சாலையின் நுழைவு வாயில் முன்பு 28.10.2023 சனிக்கிழமை காலை 9.00 மணியளவில் முற்றுகைப் போராட்டம் நடத்துவது என்று தொழிற்சங்கம் முடிவு செய்து அதன்படி முற்றுகைப் போராட்டம் நடைபெற்றது.

இந்த முற்றுகைப் போராட்டத்திற்கு ஹைடிசைன் தொழிற்சங்க தலைவர் லட்சுமி, செயலாளர் அமுதா, துணைத் தலைவர் கல்பணா, துணைச் செயலாளர் கலையரசி, பொருளாளர் சுமதி ஆகியோர் தலைமை வகித்தனர்.

போராட்டத்தில் சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் இரா. சிவா சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு, போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து பேசினார். தொடர்ந்து, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் மூர்த்தி, கலியமூர்த்தி ஆகியோர் பேசினார்கள்.

தொடர்ந்து தொழிற்சாலை நிர்வாகத்திற்கு எதிராக தொழிலாளர்கள் கோஷம் எழுப்பினர்.

இந்த முற்றுகைப் போராட்டத்தில் தொகுதி செயலாளர் மணிகண்டன், பொதுக்குழு உறுப்பினர் ராமசாமி, செல்வநாதன், வர்த்தகர் அணி அமைப்பாளர் ரமணன், ஆதிதிராவிட நலக்குழு அமைப்பாளர் செல்வநாதன், மகளிர் தொண்டர் அணி அமைப்பாளர் சுமதி, தலைவர் பழநிசாமி, கலியமூர்த்தி, தொகுதி துணைச் செயலாளர் அரிகிருஷ்ணன், இராமதாஸ், மிலிட்டரி முருகன், திலகர், மந்திரிகுமார் மற்றும் 100-க்கும் மேற்பட்ட பெண் தொழிலாளர்கள் பங்கேற்றனர்.

### திருச்செந்தூர் கோவில் அறங்காவலர் குழுத் தலைவர்

## ஆர்.அருள்முருகன் தாயார் ஆர்.விஜயலட்சுமி மறைவு!

### முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

சென்னை, நவ. 1 -

திருச்செந்தூர் கோவில் அறங்காவலர் குழுத் தலைவர் ஆர்.அருள் முருகன் தாயார் ஆர்.விஜயலட்சுமி மறைவு செய்தி அறிந்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தமது ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துள்ளார்.

"கழகத் தலைவரும் முதலமைச்சருமான மு.க. ஸ்டாலின் அவர்களின் இரங்கல் செய்தி வருமாறு :

திருச்செந்தூர் கோவில் அறங்காவலர் குழுத் தலைவர் ஆர்.அருள்முருகன் அவர்களுடைய தாயார் ஆர்.விஜயலட்சுமி அவர்கள் மறைவெய்தினார் என்ற துயரச் செய்தி கேட்டு வருந்தினேன்.

அவரது குடும்பத்தி னர்க்கும் உறவினர்களுக்கும் ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள், தமது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.



கோச்சர் சிதம்பர ராஜன் தலைமையில் கோவா மாநிலத்திற்குச் செல்லும் 30 வீரர்களுக்கு சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் இரா.சிவா, ஷூ மற்றும் சீருடை வழங்கி வாழ்த்தி வழியனுப்பி வைத்தார். கோபால், ராமசாமி, தங்கவேலு, கதிர்காமம் கண்ணபிரான், முகிலன், சுரேஷ்குமார், கலைச்செல்வன், சஞ்சய், அஜய், பாலாஜி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். இதற்கான ஏற்பாடுகளை கதிரவன் செய்திருந்தார்.



கோவை வடக்கு மாவட்டம் ஆதி திராவிடர் நலக்குழு அணியின் சார்பில் நடைபெற்ற "நீட் விலக்கு நம் இலக்கு" என்ற கையெழுத்து இயக்கத்தை மாவட்டக் கழகச் செயலாளர் தொண்டாமுத்தூர் ரவி, மாநில ஆதிதிராவிட குழு இணைச் செயலாளர் திப்பம்பட்டி ஆறுசாமி ஆகியோர் தொடங்கி வைத்தனர். நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை மாவட்ட ஆதி திராவிடர் நலக்குழு அமைப்பாளர் வழக்கறிஞர் தென்னை சிவா செய்திருந்தார். இதில் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### காரம்பாக்கம் க.கணபதி எம்.எல்.ஏ. தலைமை! தலைமைக் கழகப் பேச்சாளர் -

# எம்.எல்.நாதன் இல்ல மணவிழா! கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி. வாழ்த்து!

## அமைச்சர்கள் மா.சுப்பிரமணியன் - மா.மதிவேந்தன் - மாவட்டச் செயலாளர்கள் இராஜேஸ்குமார் - மதுரா செந்தில் பங்கேற்பு!

சென்னை, நவ. 1-

சென்னை தெற்கு மாவட்டம், மதுரவாயல் தெற்குப் பகுதி, தலைமைக் கழகப் பேச்சாளர்- மாவட்டக் கழகப் பிரதிநிதி, வனத்துறை அமைச்சர் அலுவலகத்தில் பணிபுரியும் எம்.லோகநாதன் என்கிற எம்.எல். நாதன் - எல்.ஹேமலதா ஆகியோரின் புதல்வி எல்.சங்கவிக்கும், அ.வைத்தீஸ்வரன்-செ. கௌசல்யா ஆகி யோரின் மகன் கே.வி.சிவசுப்பிரமணியனுக்கும் மணவிழா இன்று (1.11.2023 - புதன்கிழமை ) காலை 9.30 மணிக்கு, சென்னை மயிலாப்பூர், கற்பகாம்மாள் கபாலீஸ்வரர் திருக்கோயில் நவராத்திரி மண்டபத்தில் நடைபெறுகின்றது.

அதனைத் தொடர்ந்து இன்று (1.11.2023 - புதன் கிழமை) மாலை 6 மணிக்கு மணவிழா வரவேற்பு சென்னை-89, மவுண்ட் பூவிருந்தவல்லி சாலை இராமாபுரம் (எம்.ஜி.ஆர். தோட்டம் அருகில்) ஜீவன் ஜோதி திருமண மஹாலில் நடைபெறுகின்றது.

மணவிழா வரவேற்பு நிகழ்ச்சிக்கு பகுதிக் கழகச் செயலாளர் காரம்பாக்கம் க.கணபதி எம்.எல்.ஏ. தலைமை வகிக்கிறார்.

பொதுக்குழு உறுப்பினர் இராமாபுரம் வ.செல்வக்குமார், கே.ராஜீ, ஆ.செல்வம், இராமாபுரம் வி. ராஜேஷ், அ.விஜயபாலா ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

பி.ராஜேந்திரன், மு.நடராசன், ரஞ்சினி ராஜேந்திரன், வ.சண்முகம், ஜி.இராமகிருஷ்ணன், செ.ரவி, ஏ.பி. எத்திராஜ், மூன்லைட் டி. ரவி, எம்.மதன்ராஜ், பி. ரமேஷ் ஆகியோர் வரவேற்றுப் பேசுகின்றனர்.

இம்மணவிழாவில் கழகப் பொருளாளரும், கழக நாடாளுமன்றக் குழுத்தலைவருமான டி.ஆர்.பாலு, மாவட்டக் கழகச் செயலாளர் - அமைச்சர் மா.சுப்பிரமணியன், அமைச்சர்கள் கீதாஜீவன், த.மனோ தங்கராஜ், மா.மதிவேந்தன் ஆகியோர் கலந்துகொண்டு மணமக்கள் சங்கவி - கே. வி. சிவசுப்பிரமணியன் ஆகியோரை வாழ்த்துகின்றனர்.

மேலும் அரசு கொறடா கோவி. செழியன், கே.ஆர். என்.இராஜேஸ்குமார் எம்.பி., விஜய் வசந்த் எம்.பி., மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ., நாகர்கோயில் மேயர் ரெ.மகேஷ், எஸ். எம்.மதுராசெந்தில், முன்னாள் அமைச்சர் என்.சுரேஷ் ராஜன், கோ.ஐயப்பன் எம். எல்.ஏ எஸ்.அரவிந்த் ரமேஷ் எம்.எல்.ஏ., ஏ.எம்.வி. பிரபாகரராஜா எம்.எல்.ஏ., கே. பொன்னுசாமி எம்.எல்.ஏ., ப.ரங்கநாதன், பி.இராமலிங்கம் எம்.எல்.ஏ.,

சென்னை மாநகராட்சி துணை மேயர் மு.மகேஷ் குமார், ஜெ.ஹெலன் டேவிட்சன், எஸ்.ஆஸ்டின், க.தனசேகரன் எம்.சி., கவிஞர் காசி



முத்துமாணிக்கம், நொளம்பூர் வே.ராஜன், அயப்பாக்கம் அ.ம.துரைவீரமணி, வீர. கனிமொழி, மருத்துவர் ஆர். மாயவன், எஸ்.குணசேகரன், பாலவாக்கம் தா.விஸ்வநாதன், பாலவாக்கம் மு. மனோகரன், வாசுகி பாண்டியன், வேளச்சேரி எஸ்.பாஸ்கரன், பாலவாக்கம் க. சோமு, வேளச்சேரி பி. மணிமாறன், இ.நடராஜன், எம். டி.ஆர்.நாதன், ச.பரமசிவம், மா.அன்பரசன், எம்.ஸ்ரீதரன், ரத்னா லோகேஸ்வரன், த.சரவணக்குமார், ஹேமலதா கணபதி எம்.சி., செல்வி ரமேஷ் எம்.சி., ச. சங்கர் கணேஷ் எம்.சி., எஸ். பாரதி எம்.சி., சாந்தி இராமலிங்கம் எம்.சி., ஆ.மாலினி எம்.சி., எம்.இ.ஸ்டாலின் எம்.சி., ரமணி மாதவன் எம். சி., கே.வி.திலகர் எம்.சி., எஸ்.மணி, கே.குமரேசன், சைதை எஸ்.சாதிக், பி.எம். செல்வராஜ், வே.மதியழகன், இரா.பால் பாண்டியன், தீ.பாலாஜி, எம்.ஏ.செந்தில் சுரேஷ், ம.உதயகுமார் மற்றும் பலர் கலந்துகொண்டு மணமக்களை வாழ்த்துகின்றனர்.

எம்.எல்.நாதன் நன்றி கூறுகிறார்.



திருச்சியில் பசும்பொன் முத்துராமலிங்க தேவர் அவர்களின் 116 ஆவது ஜெயந்தி விழாவை முன்னிட்டு மத்திய பேருந்து நிலையம் அருகில் உள்ள அவரது திருவுருவச் சிலைக்கு நகராட்சி நிர்வாக துறை அமைச்சர் கே.என்.நேரு தலைமையில் தி.மு.க.வினர் மாலை அணிவித்து மரியாதை செய்தனர். நிகழ்ச்சியில் மத்திய மாவட்டச் செயலாளர் வைரமணி, மாநகராட்சி மேயர் அன்பழகன் எம்.எல்.ஏ., ஸ்டாலின் குமார், முன்னாள் எம்.எல்.ஏ. அன்பில் பெரியசாமி, மாவட்ட ஊராட்சி குழு தலைவர் தர்மன் ராஜேந்திரன், சேர்மன் துரைராஜ், டோல்கேட் சுப்ரமணி மற்றும் கழக நிர்வாகிகள் பழனியப்பன், விஜயா, ஜெயராஜ், துர்கா தேவி, விஜயலட்சுமி, கண்ணன், நாகராஜ் மண்டி சேகர், போட்டோ கமல், கண்ணன், மோகன் தாஸ், இளங்கோ, சிங்காரம், ராமதாஸ், டி.ஆர்.பாலசுப்பிர மணியம், பந்தல் ராமு, புஷ்பராஜ், கலைச்செல்வி, தமிழரசி, சுப்பையா, மணிவண்ணன், கருணா மூர்த்தி உட்பட பலர் கலந்து கொண்டனர்.